**O.S.179/2020**

Date : 11.09.2024.

வா.சா.1 : ஜோசப் தங்கையா

<u>வா.சா. 1 மீண்டும் அழைக்கப்பட்டு கூடுதல் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்</u>

என் உடன் பிறந்த சகோதரிகள் இரண்டு பேர் என்றால் சரிதான். அவர்கள் ஜேனட் நேசகுமாரி மற்றும் பிளாரன்ஸ் சாந்த குமாரி என்றால் சரிதான். இரண்டு சகோதரிகள் இரண்டு பேரும் தற்போது உயிருடன் இருக்கிறார்கள் அதில் ஜேனட் நேசக்குமாரி முன்பு என்னுடன் வசித்து வந்தார் தற்போது சென்னையில் வசித்து வருகிறார். மற்றொரு சகோதரி பிளாரன்ஸ் சாந்த குமாரி தற்போது கனடாவில் வசித்து வருகிறார். என்னுடன் வசித்து வந்த ஜேனட் சாந்த குமாரி நான்கு மாதங்களுக்கு முன்பாக சென்னைக்கு சென்றார். என் தகப்பனார் சௌந்தர பாண்டியன் எனக்கு 25.10.2006 ல் உயில் எழுதி வைத்தார் என்றால் சரிதான். அந்த உயிலானது மூலைக்கரைப்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.26/2006 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த உயிலில் எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட அனைத்து சொத்துக்களையும் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். அந்த சொத்துக்கள் என் தாத்தா மூலம் என் அப்பாவிற்கு பாத்தியப்பட்டதாகும். உயிலின் அசல் என் கைவசம் உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் உயிலின் நகல் எனது அப்பா எனக்கு எழுதி கொடுத்த உயில்தானா என்றால் நான் அசலுடன் ஒப்பீடு செய்தால்தான் அது பற்றி எனக்கு தெரியும். அந்த அசல் உயிலை தாக்கல் செய்ய வேண்டி அறிவிப்பு கொடுத்தால் நான் தாக்கல் செய்யலாமா என்றால் அவசியம் என்றால் தாக்கல் செய்கிறேன். இந்த வழக்கு தபசில் சொத்து என் அப்பாவிற்கு தான செட்டில்மெண்ட் மூலமாக பெறப்பட்டு வாரிசுமுறையில் எனக்கு பாத்தியப்பட்டது என கேட்டுதான் வழக்கு பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் சரிதான். உயிலில் வழக்கு சொத்து காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். என் கட்சிப்படி வழக்கு சொத்து பொறுத்து என் அப்பா ஏதாவது ஆவணம் எழுதி கொடுத்துள்ளாரா என்றால் எழுதி கொடுக்கவில்லை. நான் இந்த வழக்கில் வழக்கு சொத்து எனது அப்பாவிற்கு பாத்தியப்பட்டு எனக்கு பாத்தியப்பட்டதாக வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கிற்கு என் சகோதரிகள் அவசியமான தரப்பினர்கள் என்றால் இந்த வழக்கு தொடுப்பதற்கு எனது இரண்டு சகோதரிகளும் எழுத்து

மூலமாக அனுமதி தந்துள்ளார்கள். அது என்ன அனுமதி ஆவணம் என்றால் 50 ரூபாய் பத்திரத்தில் எழுதி தந்துள்ளார்கள். தேதி எனக்கு நியாபகம் இல்லை. வழக்கு தாக்கல் செய்வதற்கு எனது சகோதரிகள் அனுமதி ஆவணம் எழுதி தந்ததாக எனது வழக்குரையிலோ நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். நான் ஆண் வாரிசு என்பதால் சொல்லவில்லை. அவ்வாறு ஒரு அனுமதி ஆவணம் இல்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. என் மனைவியின் பெயர் கிரேஸ் செல்வி என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவது 10.07.2003 ம் தேதியிட்ட என் மனைவி கிரேஸ் செல்வி பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணம் என்றால் சரிதான். அது பி.சா.ஆ-1 ஆகும். இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ-3 ஆவணத்தில் கண்ட சாட்சி தங்கசாமிதான் பி.சா.ஆ-1 கிரைய ஆவணத்தை என் மனைவிக்கு எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அவரும் அவரின் மனைவியும் சேர்ந்து எழுதி கொடுத்துள்ளார்கள். நான் தாக்கல் செய்த வா.சா.ஆ-3 ல் உள்ள தங்கசாமியின் கையொப்பமும் பி.சா.ஆ-1ல் உள்ள தங்கசாமியின் கையொப்பமும் வேறுமாதிரி உள்ளது என்றால் சரியல்ல. அதே கையொப்பம்தான். வா.சா.ஆ.3 ஆவணம் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ-3 ஆவணத்தின் அடிப்படையில் என் தகப்பனாருக்கோ எனக்கோ சொத்தில் எந்தவித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.